**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 40/2019</u>**

பெயர் : தனஞ்செயன் D.W.1. Cross

த/பெ. : ராமசாமி

தேதி : 26.02.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. எனது தகப்பனார் ராமசாமி அவர்கள் ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் படி A அட்டவணை சொத்து எனது தாயார் முத்துலெட்சுமிக்கு கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்து வாதி ரங்கபாஷியத்திற்கும் C அட்டவணை சொத்து எனக்கும் கொடுக்கபட்டது என்றால் சரிதான். வாதிக்கு B அட்டவணை சொத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் 8 ஏக்கர் 40 ½ சென்ட் என்றால் சரியல்ல. 8 மா 43 குழி ஒதுக்கபட்டது. எனக்கு 8 ஏக்கர் 40 ½ சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 8 மா 43 குழி ஒதுக்கபட்டது.

2. வாதிக்கு 2 ஏக்கர் 80 ½ சென்ட் வடபுறமாகவும் எனக்கு நடுபகுதியில் 2 ஏக்கர் 80 ½ சென்ட் ஒதுக்கபட்டது என்றால் சரியல்ல. எனக்கு வடபுறமாக ஒதுக்கபட்டு நான் அனுபவித்து வருகிறேன். வாதி வழக்குரையில் எனக்கு ஒதுக்கபட்ட சொத்து நடுபகுதியில் உள்ளது என கூறியுள்ளதற்கு நான் எனது எதிர் வழக்குரையில் மறுப்பு தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். எனது தகப்பானர் எழுதிவைத்த உயிலுக்கு முன்பாக 14.02.1970ல் ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி பாகபத்திரம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரம் **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. நீதிமன்றத்தில் எனக்கும் வாதிக்கும் இடையில் அசல் வழக்கு எண். 30/2019 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதில் வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் எனது மனைவிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றும், அந்த சொத்தில் நான் எந்த ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது என்றும் கோரியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா 1 முதல 5 அயிட்ட சொத்துகள் பொறுத்து எனக்கும் வாதிக்கும்

இடையே ஒரு வாய் மொழி பரிவர்த்தனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வாய்மொழி பரிவர்த்தனையை மறைத்து மேற்படி சொத்தை எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பாகபிரிவினை மூலமாக கிடைத்த சொத்தினை எனக்கு உயில் மூலமாக கிடைத்த சொத்தினை பரிவர்த்ததைன செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி பரிவர்த்தனையின் அடிப்படையில் எனக்கு உயில் மூலம் கிடைத்த சொத்தினை வாதி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

4. நான் எனது மனைவிக்கு எழுதிவைத்த சொத்தின் புல எண்கள். 489/1, 489/2, 489/3, 489/4, 489/5 ஆகும். வாசாஆ 2ன் படி வாதி தான் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்கு பின்னிட்டு மேற்படி சொத்துகளை ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தான் தாவா 1 முதல் 5 அயிட்ட சொத்தினை பரிவர்த்தனையின் படி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**